1995 நவம்பர் 8]

4. கவன ஈர்ப்பு

சேலம் மரவனேரியில் அரசு கலைக் கல்லூரி வகுப்பறைகளை சாக்கடை நீர் சூழ்ந்துள்ளதால் ஏற்பட்டுள்ள பாதிப்பு குறித்து

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வு குறித்த கவன ஈர்ப்பு. திரு. கே. கந்தசாமி அவசரப் பொதுமுக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருவார்.

திரு. கே. கந்தசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சேலம் அரசினர் கல்லூரி ஆரம்பிக்கப்பட்டு 117 ஆண்டுகள் ஆகிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நிகழ்ச்சி நிரலில் இருப்பதை மட்டும் படியுங்கள்.

திரு. கே. கந்தசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "சேலம் மரவனேரியில் உள்ள அரசினர் கலைக் கல்லூரியின் வகுப்பறைகளை சாக்கடை நீர் சூழ்ந்து மாணவர் நலனை பாதிப்புக்கு உள்ளாக்குவது குறித்த" அவசரப் பொதுமுக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

***மாண்புமிகு பேராசிரியர் க. பொன்னுசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கீழ்க்கண்ட விவர அறிக்கை பேரவைமுன் வைக்கப்பட்டுள்ளது:

அறிக்கை

சேலம் மரவனேரியில் உள்ள அரசுக் கலைக் கல்லூரியில் சுற்றுச்சுவர் இல்லாத பகுதியில் சாக்கடை பாதிப்பு ஏற்பட்டு சாக்கடை நீர் கல்லூரியின் உள்ளே சூழ்ந்தது தொடர்பாக சேலம் மாநகராட்சி ஆணையர் மூலம் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. மேலும், அருகாமையில் உள்ள தனியார்ப் பள்ளி நிர்வாகத்தினர் நீதிமன்றத் தடை உத்திரவு பெற்றுள்ளது சாக்கடை நீர் கல்லூரிக்குள் வருவதை சீர் செய்யும் பணிக்குத் தடையாக உள்ளது.

திரு. கே. கந்தசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவர அறிக்கையினை நான் படித்துப் பார்த்தேன். இந்தக் கல்லூரியானது மிகவும் பழமையானது. தமிழகத்திலேயே நகராட்சியால் ஆரம்பிக்கப்பட்ட முதல் கல்லூரியாகும். பிறகு, அது அரசினர்

LEGISLATIVE ASSEMBLY TRUTH ALONE TRIUMPHS வாய்மையே வெல்லும்

கல்லூரியாக ஆக்கப்பட்டது. இன்றையதினம் அங்கு பத்து வகுப்பறைகள் சாக்கடை நீரால் சூழப்பட்டுள்ளன. அதனால் மாணவர்கள் நலன் மிகவும் பாதிக்கப்பட்டிருக்கிறது. எனவே அந்தச் சாக்கடை நீரை அப்புறப்படுத்த அரசு ஆவன செய்யுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேராசிரியர் க. பொன்னுசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சேலம், மரவனேரியில் உள்ள அரசினர் கலைக் கல்லூரிக்கு அருகில் தேவப்பிரசாத் நடுநிலைப் பள்ளி என்று ஒரு பள்ளி இயங்கிவருகிறது. அவர்கள் கல்லூரிக்கு அருகிலேயிருக்கிற 30000 சதுர அடி நிலம் தேவை என்று மாவட்ட ஆட்சித் தலைவரிடத்திலே கோரிக்கை வைத்திருந்தார்கள். அந்தக் கோரிக்கை இன்னும் நிலுவையிலே இருக்கிறது. இந்தச் சூழ்நிலையில் சாக்கடை நீர் கல்லூரி வளாகத்திற்குள்ளே வராமல் தடுப்பதற்காக சென்ற ஆண்டிலே சுற்றுச்சுவர் கட்டுவதற்கு ஏற்பாடுகள் நடைபெற்றன. அதை எதிர்த்து பள்ளி நிர்வாகம் நீதிமன்றத்திலே தடை ஆணை பெற்றிருக்கிறது. அந்தக் கல்லூரியின் சுற்றுச் சுவர் முடிவடைய இன்னும் 300 அடி தூரம் தான் இருக்கிறது. அந்த இடத்தில் தான், இரண்டு இடங்களில் சாலையோரத்தில் இருந்து சாக்கடை நீர் கல்லூரி வளாகத்திற்குள்ளே புகுந்துவிடுகிறது. கல்லூரி வளாகம் சற்றுத் தாழ்வாக இருப்பதால் 2 ஏக்கர் நிலப்பரப்பில் சாக்கடை நீர் தேங்கிவிடுகிறது. அதை அப்புறப்படுத்த உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருக்கிறது. மாநகராட்சி ஆணையரிடத்திலே தொடர்பு கொண்டு அவர்கள் முயற்சித்த போது தடையாணை இடையூறாக இருக்கிறது என்று தெரிவித்திருக்கிறார்கள்.

பிற்பகல் 11-55

இருப்பினும் முழுமையாகக் கல்லூரி செயல்பட வேண்டுமென்பதற்காக பொதுப் பணித்துறை அதிகாரிகளைத் தொடர்புகொண்டு, கல்லூரி வளாகத்திற்குள்ளாக உட்புறமாக, நீதிமன்ற ஆணைக்கு எதிராக இல்லாத நிலையில், ஒரு மண் அணை கட்ட ஏற்பாடு செய்து, வெளியிலிருந்து கழிவு நீர் வருவதைத் தடுப்பதற்கான தற்காலிக ஏற்பாடு இப்போது செய்யப்பட்டிருக்கிறது. அதற்கு என்.எஸ்.எஸ். மாணவர்களும் பயன்படுத்தப்பட இருக்கிறார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். இதற்கு நிரந்தரத் தீர்வு காணப்பட வேண்டுமென்றால், தடையாணை நீக்கப்பட வேண்டும். சுற்றுச்சுவர் முடிக்கப்பட வேண்டும், இதற்கு உடனடியாக நடவடிக்கை எடுப்பதில் நீதிமன்றத் தடையாணை தடையாக இருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.